







## தலைவர் உருவாக்கியுள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி இருக்கும் வரை

# சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சூழ்ச்சிகள் தமிழ்நாட்டில் என்றைக்குமே வெற்றி பெறாது!

## சென்னையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, டிச. 23 –**

**சென்னை, புளியந்தோப்பு, டான் பாஸ்கோ பாலிடெக்னிக் பள்ளி மைதானத்தில், மேயர் பிரியா ராஜன் ஏற்பாட்டில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் திருவிழா சிறப்பு நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை பொது மக்களுக்கு வழங்கி, கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.**

**அப்போது அவர், "சிறுபான்மை மக்களுக்கு எதிராக, இன்று ஒன்றிய பாசிச அரசு, எவ்வளவோ சூழ்ச்சிகளை எல்லாம் செய்ய முயற்சிக்கிறார்கள். ஆனால், அவர்களின் முயற்சி என்றைக்குமே தமிழ்நாட்டில் வெற்றி பெறாது. அதற்குக் காரணம் நம்முடைய தலைவர் அவர்கள் உருவாக்கி வைத்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில், சிறப்பான ஒரு நிகழ்ச்சியாக கிறிஸ்துமஸ் பெருவிழாவில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் என் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். 'மெர்ரி கிறிஸ்துமஸ் டூ எவ்ரிபடி' (*Merry Christmas to everybody*).

### நலத்திட்ட உதவிகள்

இந்த சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு எப்பொழுது வந்தாலும் ஒரு தனி உற்சாகம், தனி மகிழ்ச்சி பிறக்கும். அப்படித்தான் இன்று இந்த கிறிஸ்துமஸ் பெருவிழாவும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு அனைவரும் இங்கே மகிழ்ச்சியோடு கூடியிருக்கிறோம்.

பத்து மாணவர்களுக்கு மடிக்கணினிகள், ஐந்து தையல் இயந்திரங்கள், 1,200 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள், அருட்தந்தையர்களுக்கு நலத்திட்ட உதவிகள், கன்னியாஸ்திரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் என அனைவருக்குமான விழாவாக, ஒரு மகிழ்ச்சியான சந்திப்பாக, ஒரு நலத்திட்ட நிகழ்ச்சியாக இன்று அமைச்சர் அண்ணன் சேகர் பாபு அவர்களின் ஏற்பாட்டில் திரு.வி.க நகரில் சிறப்பான வகையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்கு முதலில் அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அண்ணன் சேகர் பாபு அவர்கள் இந்து சமய அறநிலையத் துறைக்கு அமைச்சர். ஆனால், அவர் ரம்ஜானையும் சிறப்பாகக் கொண்டாடுவார், கிறிஸ்துமஸையும் சிறப்பாகக் கொண்டாடுவார். கிறிஸ்துமஸ் என்று சொன்னால், வண்ண விளக்குகள், நட்சத்திரம், கிறிஸ்துமஸ் மரம் என எங்குப் பார்த்தாலும் வெளிச்சமாக, கொண்டாட்டமாக, மகிழ்ச்சியாக இருக்கும்.

### கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி

அதிலும் கிழக்கு மாவட்டத்திற்கு எப்பொழுதுமே கூடுதல் சிறப்பாக இருக்கும், கூடுதல் மகிழ்ச்சியாக இருக்கும். இன்று இந்த நிகழ்ச்சியும் வெறும் கொண்டாட்டமாக இல்லாமல் நம்முடைய திராவிட மாடல் அரசைப் போல அனைவருக்கும் பயனுள்ளதாக, அத்தனை பேருக்கும் ஒரு நல்ல விஷயத்தைச் செய்து கொடுக்கிற நல்ல விழாவாக இன்று இந்தச் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியை அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து திராவிட மாடல் அரசு என்று நாம் பெருமையாகச் சொல்கிறோம். திராவிட மாடல் என்றால் என்னவென்று கேட்பவர்களுக்கு, நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்கிறார்கள், எல்லோருக்கும் எல்லாமுமாக இருக்கக்கூடிய அரசு, அனைத்துத் தரப்பினருக்கும் துணை நிற்கக்கூடிய ஒரு அரசாக நம்முடைய அரசு, நான்கரை ஆண்டுகள் இங்கே பொறுப்பேற்றுச் செயல்பட்டிருக்கிறது.

### முதல் கையெழுத்து



அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சில திட்டங்களை மட்டும், இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆட்சிக்கு வந்தவுடன் நம்முடைய முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான அந்த 'விடியல் பயண திட்டம்'. கிட்டத்தட்ட நான்கரை ஆண்டுகளில் 850 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் படிக்க வேண்டும், பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும் என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். பள்ளிக்கூடம் வந்தால் போதாது, அவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, நம்மைக்காக்கும் 48, இல்லம் தேடி மருத்துவம் எனப் பல்வேறு திட்டங்கள். இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இன்று அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் வழங்கிக் கொண்டிருக்கிறார்.



> துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மேயர் பிரியா ஏற்பாட்டில் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்து 1500 கிறிஸ்துவ சகோதர சகோதரிகளுக்கு புத்தாடை, கேக், 10 கிலோ அரிசி, மற்றும் பரிசு வழங்கியும்,10 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கியும்,5 பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கியும்,வருகை தந்த பயனாளிகள் அனைவருக்கும், பிரியாணி வழங்கினார்.

இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதனால்தான் இன்று 11.19 சதவிகித வளர்ச்சியுடன் இன்று இந்தியாவிலேயே வளர்ச்சி அடைகின்ற மாநிலத்தில் முதல் இடத்தில் நம்முடைய தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது. இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாமல் சில பேர்தான் இன்று தமிழ்நாட்டிற்கு, நம்முடைய மாநிலத்திற்கு ஏதாவது ஒரு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### புதிய கல்விக் கொள்கை

மீண்டும் இந்தித் திணிப்பைத் தமிழ்நாட்டிற்குள் திணிக்கப் பார்க்கிறார்கள். புதிய கல்விக் கொள்கை என்று ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். வழக்கத்திலே இல்லாத, யாருமே பேசாத சமஸ்கிருதத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நம்மிடம் திணிக்கிறார்கள். குலக்கல்வித் திட்டத்தை மீண்டும் தமிழ்நாடு மீது திணிக்கப் பார்க்கிறார்கள். தொகுதி மறுவரையறை என்று சொல்லி, நம்முடைய மாநிலத்தின் உரிமைகளைக் குறைக்கப் பார்க்கிறார்கள்.

எஸ்.ஐ.ஆர் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் அபாயத்தையும் நம் முதலமைச்சர், நம் தலைவர்தான் இந்தியாவிலேயே முதன்முதலாக எடுத்துச் சொன்னார். சிறுபான்மையினர், பெண்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகளை எல்லாம் எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்று பாசிஸ்டுகள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

### நம்முடைய உரிமை

இன்று நாம் நினைத்தது போன்று, நேற்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் பார்த்தீர்கள் என்றால் 98 லட்சம் மக்களின் வாக்குகளை நீக்கி இருக்கிறார்கள். குறிப்பாகச் சென்னை மாவட்டத்தில் மட்டும் 14 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டிருக்கின்றன. நான் உங்களிடம் இந்த கிறிஸ்துமஸ் தினத்தில், இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் உங்கள் அத்தனை பேரிடமும் வைக்கக்கூடிய ஒரே வேண்டுகோள், இங்கே வருகை தந்துள்ள நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய வாக்குகள் இருக்கின்றனவா என்று நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அது நம்முடைய கடமை. அது நம்முடைய கடமை மட்டும் கிடையாது, அது நம்முடைய உரிமை. அப்படி உங்களின் வாக்குகள் இல்லை என்றால், கழகத்தின் பி.எல்.ஏ2 உறுப்பினர்களை சந்தித்து 'படிவம்6'ஐ கொடுத்து மறுபடியும் விண்ணப்பம் செய்தாக வேண்டும். வருகின்ற ஜனவரி 18ஆம் தேதி வரை நமக்கு கால அவகாசம் இருக்கிறது.

இன்று இவ்வளவு சூழ்ச்சிகளை ஒன்றிய அரசு தமிழ்நாடு மீது திணித்துக் கொண்டிருக்கும்போது, நம்முடைய அரசு சிறப்பான ஒரு அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சிறுபான்மையினர் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செய்துள்ளது.

### கல்வி உதவித் தொகை

குறிப்பாக கிறிஸ்தவ மாணவர்களுக்கு ரூபாய் 7 கோடி அளவுக்கு இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் கல்வி உதவித் தொகையை மட்டும் நம்முடைய அரசு வழங்கியுள்ளது. கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு மானியமாக 13 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். அதேபோன்று ஜெருசேலத்திற்கு புனிதப் பயணம் மேற்கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் 37 ஆயிரம் ரூபாய் மானியம் இன்றைக்கு நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. தேவாலயங்களைப் புதுப்பிப்பதற்கு, இதுவரை ஐந்து கோடி ரூபாய் வரை சிறப்பு நிதியாக நம்முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

சிறுபான்மையினரின் கல்வி நிலையங்களுக்கு நிரந்தர அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று நம் அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. இது மட்டுமல்ல, நேற்று திருநெல்வேலி யில் நடந்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்துகொண்டு முக்கிய மான அறிவிப்புகளை வெளியிட்டார். அங்குச் சொன்னதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

### ஆசிரியர் தகுதித் தேர்வு

சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர் தேர்வுக் குழுவில் அந்தந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளே ஆசிரியர்களைத் தேர்வு செய்யலாம் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது பல வருடக் கோரிக்கை. ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பாகச் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் எதிர்கொள்கின்ற பாதிப்பை உணர்ந்து, மாநில அரசின் வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் இருந்து, அவற்றை நம் அரசு திரும்பப் பெற்றுள்ளது. இந்த நடவடிக்கையினால் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில், 1,500 ஆசிரியர்கள் நியமனம் இன்று செய்யப்பட்டுள்ளனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி

இப்படிச் சிறுபான்மை மக்களுக்காக இன்னும் அதிகமாக உழைப்பதற்கு நம்முடைய அரசு தயாராக இருக்கிறது. சிறுபான்மை மக்களுக்கு எதிராக இன்று ஒன்றிய பாசிச அரசு எவ்வளவோ சூழ்ச்சிகள் எல்லாம் செய்ய முயற்சிக்கிறார்கள். ஆனால், அவர்களின் முயற்சி என்றைக்குமே தமிழ்நாட்டில் வெற்றிபெறாது. அதற்குக் காரணம் நம்முடைய தலைவர் அவர்கள் உருவாக்கி வைத்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தான்.

இது ஏதோ தேர்தலுக்காக உருவாக்கிய கூட்டணி கிடையாது. நம் கூட்டணி கொள்கைக் கூட்டணி என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அதனால்தான் இன்று அ.தி.மு.கவின் கூட்டணியை நாம் சந்தர்ப்பவாத கூட்டணி என்று கூடச் சொல்லமுடியாது. அது ஒரு முதலாளிக்கும், அடிமைக்குமான ஒரு கூட்டணியாக மாறிக்கொண்டிருக்கிறது.

மத நல்லிணக்கத்திற்கும் மக்கள் ஒற்றுமைக்கும் எதிரான பாசிஸ்டுகளின், அடிமைகளின் அந்தக் கூட்டணியைத் தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் முறியடித்துக் காட்டுவார்கள். ஏனெனில், திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்றைக்குமே சிறுபான்மை மக்களின் பாதுகாப்பிற்கு அரணாக நிச்சயமாக இருக்கும்.

எனவே வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் மிகப்பெரிய வெற்றியைத் தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக திரு.வி.க நகரில் மிகப்பெரிய வெற்றியை, நீங்கள் அத்தனைபேரும் நிச்சயமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, உதயசூரியன் சின்னத்திற்கு நீங்கள் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்துள்ள வணக்கத்திற்குரிய மேயர் பிரியா ராஜன் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, 'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று கூறிக்கொண்டு, வருகை தந்துள்ள அனைத்து கிறிஸ்தவ பெருமக்களுக்கும் மீண்டும் என் இனிய கிருஸ்துமஸ் தின வாழ்த்துகளைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகளைத் தெரிவித்துப் பேசினார்.

அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, ஆவடி சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வில்சன், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் அருட்தந்தை ஜாய் குரியன், காளிகாம்பாள் திருக்கோயில் குருக்கள் காளி தாஸ் சிவாச்சாரியார், போஹ்ரா முஸ்லிம் சங்கத் தலைவர் பக்கீர் பாய், லயோலா கல்லூரியின் ரெக்டர் அருட்தந்தை அந்தோணி ராபின்சன், மரியலயா குழந்தைகள் இல்ல நிர்வாகி மரியலயா, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் ஷேக் அப்துல்லா, வழக்கறிஞர் சந்துரு, உமாகாந்த், வழக்கறிஞர் தாமோதரன், வரதன், கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏகப்பன், மாவட்டத் துணைச் செயலாளர் புனிதவதி எத்திராசன், பகுதி கழகச் செயலாளர்கள் சாமிக்கண்ணு, தமிழ்வேந்தன், ஐ.சி.எஃப்.முரளி, நாகராஜன், வாசு, கு.பி.ஜெயின், டி.எஸ்.பி.ராஜகோபால், நாகராஜன், சோ.வேலு, சுதாகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மகேஷ்குமார், மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் உதயசங்கர், துளசிங்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் ஜெகதீஷ், வினோத், ஜி.ஜே.பிரபு, தனசேகர், சங்கர் நானா, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் சரவணன், வட்டக் கழகச் செயலாளர்கள் அபோய், டீக்கா உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.